<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | C.C.434/2023 | Date: 25.08.2025 |
| Deposition of Witness for | : | **அ.சா.1** | |
| Name | : | **செந்தில்குமார்** | |

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).**

<u>(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).</u>

**<u>குறுக்கு விசாரணை :-</u>**

1) சம்பவ சாலை போக்குவரத்து நிறைந்த சாலை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகே நான்குபுறமும் சாலைகள் பிரிந்து செல்லும் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகே நான்குபுறமும் சாலைகள் பிரிந்து செல்வதால் வாகனங்கள் வேகமாக செல்லக்கூடாது என்பதற்காக பேரி கேட் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் வாகனத்தை ஓட்டிசென்றதால் எனக்கு பின்னால் என்ன வாகனம் வந்தது, அது எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2) சம்பவ சாலை ஒருவழிச்சாலை என்றால் சரியல்ல. நான் சென்றபோது எனக்கு முன்னால் ஒரு வாகனம் வந்தது என்றும், அதனால் நான் வலதுபுறமாக ஏறி வந்தேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு காரணம் நான் தான் என்றும், எதிரிக்கும், இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,

Sd/-Senthilkumar

Judicial Magistrate No.1,
Sankari.

**<u>DEPOSITION OF WITNESS</u>**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | |
|---|---|---|
| Case No | : C.C.434/2023 | Date: 25.08.2025 |
| Deposition of Witness for | : **அ.சா.2** | |
| Name | : **பிரகதீஸ்வரன்** | |

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).**

<u>(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).</u>

**<u>குறுக்கு விசாரணை :-</u>**

1) சம்பவத்தின்போது விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தின் பின்புறம் அமர்ந்து சென்றேன் என்றால் சரிதான். நான் வாகனத்தின் பின்னால் உட்கார்ந்துசென்றதால் முன்னால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகே நான்குபுறமும் சாலைகள் பிரிந்து செல்லும் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகே நான்குபுறமும் சாலைகள் பிரிந்து செல்வதால் வாகனங்கள் வேகமாக செல்லக்கூடாது என்பதற்காக பேரி கேட் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) இந்த விபத்திற்கு காரணம் முன்னால் சென்ற வாகனம் வலதுபுறமாக ஏறிவந்ததால் தான் நடந்தது என்றால் சரிதான். முன்னால் சென்ற வாகனம் திடீரென வலதுபுறமாக ஏறி வராமல் இருந்திருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். விபத்திற்கு காரணம் எங்களுக்கு முன்னால் சென்று கொண்டிருந்த வாகனத்தில் அஜாக்கிரதையும், கவனக்குறைவு தான் என்றால் சரிதான்.

Sd/-Pragadeeshwaran

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.